**நூலக நிறுவனம்**
**மாதாந்த அறிக்கை – பெப்ரவரி 2016**

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2016 பெப்ரவரி மாத ஆவணவாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் | 183 | 3212 |
| நூல்கள் மற்றும் பிரசுரங்கள் | 32 | 4612 |
| தரமேம்படுத்தல்கள் | 3 | 594 |
| மொத்த ஆவணங்கள் | 218 | 8418 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- இம்மாதம் ஆவணவாக்கப்பட்ட 215 ஆவணங்களும் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு 03 தரமேம்படுத்தல் ஆவணங்களும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
- தேடலினை இலகுபடுத்துவதற்காக பருவவெளியீடுகள் மற்றும் புனைவு அல்லாத வெளியீடுகளுக்கான உள்ளடக்கம் 179 ஆவணங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளது.
- இதழியல் தொடர்பான தேடல்களை இலகுபடுத்தும் பொருட்டு நூலகத்தில் இணைக்கப்பட்டுள்ள இதழ்களுக்கான அறிமுகக் குறிப்பு இணைத்து வருகிறோம். அவ்வகையில் பெப்ரவரியில் 125 இதழ்களுக்கான அறிமுகக் குறிப்பினை இணைத்துள்ளோம்.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- திரு. கோப்பாய் சிவம் அவர்கள் வழங்கிய ஆவணங்களில் ஒரு பகுதி இம்மாதம் ஆவணப்படுத்தப்பட்டது.
- திரு கலாமணி பரணீதரன் அவர்களும் தனது சேகரிப்பிலிருந்து வழங்கிய ஆவணங்களில் ஒரு பகுதி ஆவணப்படுத்தப்பட்டது.
- சந்நிதியான் ஆச்சிரமம், சைவ மகாசபை, சைவப்புலவர் சங்கம் ஆகியோருடனான ஆவணப்படுத்தல் தொடர்பான ஆரம்பக்கட்ட உரையாடல்களும் சந்திப்புகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

- மேலும் வேறு பலரும் சிறிய எண்ணிக்கையில் ஆவணங்களை இம்மாதம் வழங்கினர்.

  வெளியீடுகளை பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- பெப்ரவரி மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

எழுத்தாளார்கள்:

01. சத்தியதேவி நித்தியானந்தராஜா
02. கே.பரமேஸ்வரி
03. நடராஜா சத்தியபாலன்
04. குணரட்ணம் ரமணன்
05. ஏகாம்பரம் ரவிவர்மா
06. முருகேசு ராசநாயகம்
07. வேதா லங்காதிலகம்

நிறுவனம்:

01. முரளி புத்த நிலையம்

**ஆளுமை விபரம் தொகுப்பு (Bibliography)**

- வாழ்க்கை வரலாற்று களஞ்சியம் தொகுக்கும் பணியில் இம்மாதம் 175 ஆளுமைகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு இணைக்கப்பட்டன. அத்துடன் 159 ஆளுமைகளில் மேலதிக தகவல்கள் இணைக்கப்பட்டன. அவ்வகையில் மொத்தம் 2,414 ஆளுமை விபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

- நூலக வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களிலிருந்து இலங்கை தமிழ்பேசும் சமூகம் சார்பில் வெளியாகிய ஆளுமை, வாழ்க்கை வரலாறு வெளியீடுகளிற்கான நூல்விபரப்பட்டியல் தயாரிக்கப்பட்டு 132 வெளியீடுகள் பட்டியலிடப்பட்டுள்ளது. இவை வாழ்க்கை வரலாற்று ஆவணவாக்கம் தொடர்பான எதிர்காலச் செயற்றிட்டங்களில் பயன்படுத்தப்படவுள்ளன.

**ஆளணி (Human Resource)**

- எண்ணிம ஆவணவாக்கம் மற்றும் எண்ணிம நூலகம் தொடர்பாக அலுவலர்களுக்கு நிர்வாக அலுவலரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இப்பயிற்சியில் மின்வருடல், சரிபார்த்தல், பட்டியலிடல், நிர்வாக தரவு உள்ளிடல், கட்டுரை இணைத்தல், பதிவேற்றல், காப்புப்படி எடுத்தல் தொடர்பான பயிற்சிகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. இப் பயிற்சியினைத் தொடர்ந்து அலுவலர்களுக்கான புதிய வேலை ஒழுங்குகள் நடைமுறைக்கு வந்தன.

**வரவு செலவு அறிக்கை (Financial Report)**

- பெப்ரவரி மாதத் தேவைகளுக்காக ரூ. 286,387.12 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 198,200.00 வாடகை, தொலைபேசி மற்றும் இணையம், ஏனைய செலவுகள் 88,187.12 ஆகியன உள்ளடங்குகின்றன.
- விடிவு நிறுவனம் ரூ. 124,800 உம் அவுஸ்திரேலிய அன்பர் ஒருவர் ரூ. 10,400.00 ம் வழங்கியுள்ளனர். மேலும் நோர்வே அன்பர்கள் ஊடாக ரூ. 81,250.00 உம் கிடைக்கப்பெற்றது.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.